முருகப்பெருமான் துணை

**மகான் எறிபத்த நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

24.11.2021, புதன்கிழமை

1. வாருங்கள் கலியுக மக்களே
வள்ளலாய் வாழும் அரங்கன்
ஆறுமுகனார் ஞானக்குடில் நோக்கி
அனுகிவந்து அருளாசி பெறவே
2. ஆசிபெற ஞானம் கூடுமென
அருளியே துல்லிய ஆசிதனை
ஆசிதனை பிலவ தேள் திங்கள்
அட்டம திகதி கணக்கன் வாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 8ம் நாள், 24.11.2021 புதன்கிழமை)
3. வாரமதில் எறிபத்த நாயனாரும்
வழங்குவேன் உலக நலம்பெற
பாரமான மனச் சுமைகளை
பாவ வினைகளை போக்கும் சக்தியாக
4. சக்தியாக வந்த அரங்கனை
சற்குருவாக ஏற்று மக்கள்
பக்திபட அனுகி தீட்சை பெற்று
பணிந்து தொடர்ந்து வர
5. வருகவே மக்களின் துன்பமான
வறுமை கட்டம் நலிவும் அகலும்
குருவருளாக அரங்கன் தயவு
குறைவிலா யாவர்க்கும் பரவி
6. பரவியே முழுமையான வகையில்
பாதுகாப்பும் சகலவளமும் காண்கும்
அரங்கமகா தேசிகன் வழிகாட்டும்
அன்னதான சேவையை உலகோர்
7. உலகோர் ஏற்று வருதலுற
உலகமெங்கும் சேவை செய்திட
வளமான தருமபலம் கொண்ட
வையகமாக உலகம் மாறியே
8. மாறியே எந்த இன்னலுமிலா
மக்களை பாதுகாக்கும் பூமியாக
ஆறுமுகனார் அருளாசிபடவே
அகிலமே ஞான பூமி ஆகும்
9. ஆகவே ஞானத் தலைவன்
ஆறுமுகனார் வழிபாடு தன்னை
மகான் அரங்க ஞானியும்
மகா சோதியாக சரவணச் சுடரேற்றி

10. ஏற்றியே வழிகாட்டல் புரிய
ஏற்று கலியுக மக்களெல்லாம்
உற்றதொரு நித்ய பூசையாக
உயர் சோதி ஏற்றி வணங்கி

11. வணங்கி நாமசெபம் போற்றி
வல்லமைபட சன்மார்க்கம் தனில்
இணங்கி சரணடைவு கண்டிட
எல்லோரும் ஞானவான்களாகி சிறப்பர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–